பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். .12.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் (31.12.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்களின் நவம்பர் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் நவம்பர் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் நவம்பர் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணிக்கு 2017–18ம் ஆண்டிற்கான இடைவெளி நிரப்பு நிதி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற உரிய பிரேரணைகள் தயார் செய்து அனுப்ப கோரப்பட்டது. பார்வை 2ல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி நகராட்சிக்கு சொந்தமான காந்தி காலனி பகுதியில் 5 பிளாக்குகள் (தலா 6 வீடுகள் கொண்டது) துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டில் பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் பரிந்துரையின்படி நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.15040/2017/இ1, நாள்.14.12.2017ன்படி காந்தி காலனி பகுதியில் அமைந்துள்ள பழைய சிதிலமடைந்த ஓட்டு கட்டிடத்தினை அகற்றிவிட்டு புதிதாக 5 பிளாக்குகள் (தலா 6 வீடுகள் கொண்டது) 30 வீடுகள் கட்டும் பணிக்கு ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டிற்கு 270.00 லட்சம் முழு மானியமாகவும், 30.00 லட்சம் நகராட்சி பங்குத்தொகையாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.<br><br>மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு மண் பரிசோதனை செய்து உரிய தரச்சான்றுடனும், நகர் ஊரமைப்புத் துறையின் வடிவமைப்பு ஒப்புதலுடனும் உரிய பிரேரணைகள் தயார் செய்து தலைமை பொறியாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம்.15040/2017/DO1 நாள்.19.02.2018ன்படி மேற்படி திட்டப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| | இந்நிலையில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் தலைமையில் நகராட்சி பொறியாளர், துப்புரவு ஆய்வர் ஆகியோர் முன்னிலையில் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுடன் இப்பொருள் குறித்து கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நகராட்சி ஆணையாளர் அவர்கள் இத்திட்டம் குறித்து துப்புரவுப் பணியாளர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறி பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கூறினார்கள். உரிய அறிவிப்பும் சார்பு செய்யப்பட்டுள்ளது. 18.07.2018 அன்று மேற்படி பணிக்கு மாநில அளவில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 06.06.2018 அன்று நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்நிலையில் திருமதி. ஆர். சண்முகவள்ளி உள்ளிட்ட 14 நபர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் காந்தி காலனி பகுதியில் தாங்கள் வசிப்பதாகவும், தங்களுக்கு பட்டா வழங்குமாறும் W.P.(MD).No.12407 to 12420 of 2018 and W.P.(MD) No.11274 to 11287ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி கட்டுமானப் பணியிடத்திற்கான இடைக்கால தடையாணை வழங்கப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) வாக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>மேற்படி வழக்கிற்கு உரிய எதிர்வாதுரை தயார் செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் நிலை குறித்தும், மேற்கொண்டு பணிகள் தொடங்குவது குறித்தும், நகர்மன்ற வழக்கறிஞரிடம் கருத்து கோரப்பட்டது. வழக்கறிஞர் தன்னுடைய கருத்துருவில் நீதிமன்றத் தடையாணை நிலுவையில் இருப்பதால், பணிகள் மேற்கொண்டு தொடர வேண்டாம் என தெரிவித்துள்ளார் (நகல் இணைக்கப்பட்டுள்ளது). இந்நிலையில் இப்பணியினை நகராட்சிக்கு சொந்தமான வேறு இடத்தில் மாற்றி கட்டும் பொருட்டு ஆய்வு செய்யப்பட்டது. இவற்றில்<br><br>1. F 8/20 அண்டக்குடி போகும் பாதை களம் புறம்போக்கு<br>2. H 29/2 வாரச்சந்தை<br>3. D 3 16/2 கிறிஸ்தவ காலனி களம் புறம்போக்கு<br><br>ஆகிய 3 இடங்களில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி இடங்களில் மாற்றியமைக்க உத்தேசிக்கையில் அப்பகுதி பொது மக்கள் மேற்படி இடத்தை நெல் பயிருக்கான களமாக உபயோகப்படுத்துவதாக கூறி எதிர்ப்பு தெரிவித்ததின் காரணமாவும், போதுமான இடவசதி இல்லாததினாலும், மேற்படி பகுதிகளில் குடியிருப்புகள் கட்ட ஏதுவானதாக இல்லை என்பதாலும், மேற்படி திட்டப்பணிக்கான நிதி ஒதுக்கீட்டை மதுரை மண்டலத்தில் உள்ள வேறு நகராட்சிக்கு மாற்றம் செய்ய உரிய கருத்துருக்கள் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பரிந்துரையுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br><br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.5 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் நடைபெற்று வருகிறது. அம்மா உணவகத்திற்கு பேருந்து நிலையம் உட்புறம் மற்றும் மதுரை – இராமேஸ்வரம் சாலையிலும் இரண்டு நுழைவாயில் உள்ளது. அம்மா உணவகத்திற்கு பேருந்து நிலையம் உட்புற நுழைவாயில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மதுரை – இராமமேஸ்வரம் சாலையில் அமைந்துள்ள நுழைவாயில் ஒரு கடை நடத்தும் அளவிற்க்கு இடம் இருப்பதால் இந்நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் நோக்கத்திலும், இவ்விடத்தினை சுத்தமாக பராமரிக்கவும், மேற்கண்ட இடத்தினை அளவெடுத்து மராமத்து பணி செய்து மாதவாடகை நிர்ணயம் செய்யவும் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 வட்டாட்சியர் அலுவலகம் அருகில் ஒரு சிறிய ஆஸ்பெட்டாஸ் கட்டிடம் உள்ளது. அதற்கான மாதவாடகை நிர்ணயம் செய்து பொது ஏலம் |

| | |
|---|---|
| | நடத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம் |
| பொருள்.6 | 1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முத்தலாம்மன் கோவில் தெரு, அங்காளம்மன் கோவில் தெரு மற்றும் சென்குப்தா தெரு ஆகிய தெருக்களின் ஓரங்களில் காய்கறிகள் வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடமிருந்து நாள் ஒன்றுக்கு ரூ.5/– ஆக இருந்ததை ரூ.10/–ஆக உயர்த்தி வசூல் செய்யும் உரிமம்.<br>2. இந்நகராட்சிக்கு சொந்தமான கைக்கோலார் ஊரணியில் அமைந்துள்ள தினசரி நாளங்காடியில் சூப்பர் மார்க்கெட் பின்புறம் உள்ள சட்டர் போட்ட 21 கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.40/– வசூல் செய்யும் உரிமம் மற்றும் பின்புறம் உள்ள திறந்தவெளிக் கடைகள் 118க்கும் நாள் ஒன்றுக்கு ரூ.20/– வசூல் செய்யும் உரிமத்திற்கும்.<br>3. இந்நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை அருகில் உள்ள சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.5/– வசூல் செய்யும் உரிமம்.<br>4.இந்நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை அருகில் உள்ள சிறுவர் பூங்காவில் அமைந்துள்ள கடைக்கு மாத வாடகை வசூல் செய்யும் உரிமம்.<br>5. இந்நகராட்சி பேருந்து நிலையம் அருகில் மதுரை–இராமமேஸ்வரம் சாலையில் அமைந்துள்ள கடைக்கு மாத வாடகை வசூல் செய்யும் உரிமம்.<br>மேற்கண்ட உரிமங்கள் மற்றும் 2019–2020ம் ஆண்டுக்கு நடைபெறும் அனைத்து குத்தகை இனங்களையும் போது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்கு உண்டாகும் செலவு தொகை உத்தேச மதிப்பீடு ரூ.200000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு உண்டாகும் செலவு தொகையினை இந்நகராட்சி போது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | இந்நகராட்சியிலிருந்து 2018–19ம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நகராட்சி பங்குத் தொகை ரூ.50000/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி பங்குத் தொகை ரூ.50000/–ஐ தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.871/2017/சி1) |
| பொருள்.8 | அரசாணை எண்.518 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்குதுறை நாள்.05.12.1984ம் தேதிய உத்தரவில் நகராட்சி நிதியில் பவர்டில்லர் ஓட்டுநர்களை நியமனம் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.எப்3/15088/2009, நாள்.12.09.2011ன்படி பரமக்குடி நகராட்சியில் பொறியியல் பிரிவில் இரண்டு இழுவை வண்டி ஓட்டுநர் பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2012 வரை ஓராண்டு காலத்திற்கு மட்டும் நீட்டித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், 01.10.2012 முதல் 30.09.2013 வரை ஓராண்டு காலத்திற்கும், அதனை தொடர்ந்து 01.10.2013 முதல் 30.09.2014ம் ஆண்டு வரை ஓராண்டு காலத்திற்கும், 01.10.2014 முதல் 30.09.2015 வரை ஓராண்டு காலத்திற்கும் 01.10.2016 முதல் 30.09.2017 வரை ஓராண்டு காலத்திற்கும் மற்றும் 01.10.2017 முதல் 30.09.2018 வரை மேற்படி பணியிடத்தை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 01.10.2018 முதல் 30.09.2019 வரை ஓராண்டு |

| | |
|---|---|
| | காலத்திற்கு மேற்கண்ட பணியிடத்தை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.சி1/1618/2007 |
| பொருள்.9 | இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டு விபரங்களை தமிழ் நாளிதழ்களில் சிறப்பு மலராக வெளியிட மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் ந.க.எண்.176/செமதொ/2018, நாள்.11.09.2018ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க தினபூமி நாளிதழ் சிறப்பு தொழில் மலருக்கு தொகை ரூ.21000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.10 | 209– பரமக்குடி சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களை செம்மைப்படுத்துதல் மற்றும் இதர தேர்தல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சியர் 17.12.2018ம் தேதிய ஆலோசனை கூட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் தொடர்பாக 20.12.2018ம் தேதியில் வருகை புரிந்துள்ள (Roll Observer) அவர்களின் ஆலோசானை கூட்டம் மற்றும் அதனை தொடர்ந்து பரமக்குடி சார் ஆட்சியர் 10.12.2018, 14.12.2018 மற்றும் 21.12.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தலின்படி வருகின்ற பராளுமன்ற தேர்தல், சட்ட மன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் இவையினை எதிர் நோக்கி தற்போது தேர்தல் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. நகராட்சி பகுதிகளுக்குட்பட் வாக்காளர்களை கணிணி மூலம் கண்டறிந்து நீக்கம் செய்ய (Demographically Similar Entry Progress ) (DES) என்ற முறையில் Photo Matching and Doubtful cases Check list Generated என்ற பணிகள் மேற்கொள்ளுதல், வாக்காளர் நீக்குதல் தொடர்பாக Form – 7 ஜெராக்ஸ் எடுத்து விநியோகம் செய்தல் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து அவ்வப்போது BLO மற்றும் BLA இவர்களை வைத்து ஆலோசனை கூட்டம் நடத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>எனவே மேற்படி தேர்தல் பணிகளுக் இதனால் ஏற்படும் அனைத்து சில்லரை செலவினங்களுக்கு உத்தேச தொகை ரூ.50000/– பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1963/18/சி3 (தேர்தல்) |
| பொருள்.11 | 209– பரமக்குடி சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களை செம்மைப்படுத்துதல் மற்றும் இதர தேர்தல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சியர் 17.12.2018ம் தேதிய ஆலோசானை கூட்டம் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் தொடர்பாக 20.12.2018ம் தேதியில் வருகை புரிந்துள்ள (Roll Observer) அவர்களின் ஆலோசனை கூட்டம் மற்றும் அதனை தொடர்ந்து பரமக்குடி சார் ஆட்சியர் 10.12.2018, 14.12.2018 மற்றும் 21.12.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தலின்படி வருகின்ற பாராளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் இவையினை எதிர் நோக்கி தற்போது தேர்தல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.<br>மேற்படி தேர்தல் பணியில் கணிணியில் அவ்வப்போது வரப்பெறும் மின்னஞ்சல் செய்திகளுக்கு உடனுக்குடன் அறிக்கை மற்றும் படிவங்கள் தயார் செய்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதற்கு கணிணி அமைப்பாளர் (Computer Programmer) வைத்து மேற்படி |

பணிகள் மேற்கொள்ள இருப்பதால், மேற்படி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 89 நாட்களுக்கு மட்டும் ஒருவரை நியமித்து கொள்ளவும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டியில் ஒப்புதல் வழங்கப்பட்ட சம்பள விலை விகிதத்தின்படி ஊதியம் வழங்கவும்.

மேற்படி தேர்தல் பணிகளுக்கு இதனால் ஏற்படும் அனைத்து செலவினங்கள்கு உத்தேச தொகை ரூ.34620/—ஐ பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1963/18/சி3 (தேர்தல்)

**பொருள்.12**

பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6ல் குருநாதன் கோவில் கிழக்கு கீழ வீதி வடக்குப் பகுதியில் உள்ள தெரு மிகவும் மேடுபள்ளமாக இருப்பதால், மேற்படி சாலையை சரிசெய்தல் மற்றும் வடிகால் மற்றும் சிறுபாலம் சீர் செய்யும் பணிக்கு 24.12.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.தமிழரசி,<br>ஒப்பந்ததாரர் | 0.06% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு. எம் சங்கர்,<br>ஒப்பந்ததாரர் | 0.54% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.தமிழரசி, ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.06% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**பொருள்.13**

இந்நகராட்சி பொது சுகாதார டிப்பர் வாகனம் TN 65 A6343க்கு பேட்டரி கொள்முதல் செய்யப்பட்டு 2 வருடங்கள் ஆகிவிட்டபடியால் பேட்டரி பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், அதனால் புதிய பேட்டரி வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் பொது சுகதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் 10.12.2018ம் தேதிய முன் அனுமதியின் படி புதிய பேட்டரி கொள்முதல் செய்ய சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 11.12.2018 அன்று கீழ்க்கண்ட 2 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ.எண்** | **விநியோகம் செய்ய வேண்டிய பொருட்கள்** | **என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி** | **செந்தில் மோட்டார் ஒர்க்ஸ் , பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி** |
|---|---|---|---|
| 1 | TN 65 A 6343 டிப்பர் லாரிக்கு புதிய பேட்டரி | ரூ.9500/— | ரூ.9850/— |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பேட்டரி விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் 11.12.2018ம் தேதிய முன்அனுமதியின்படி மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலா் அவா்களின் 10.12.2018ம் தேதிய முன் அனுமதியின் படி உள்ளூா் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>3. தனி அலுவலா் அவா்களின் 11.12.2018ம் தேதிய முன் அனுமதியின்படி என்.கணபதி மோட்டாா் ஒா்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.14</td><td>பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வாா்டு எண்.29ல்ஆஸ்பத்திரி சாலை சிறுவா் பூங்கா பின்புறம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திறந்த வெளியில் கடைகள் கட்டுவதற்கு நகா்மன்றத் தீா்மான எண். நாள். அனுமதி அளிக்கப்பட்டதன் போில் மேற்படி பணிக்கு 26.12.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பாா்வைக்கும், அனுமதிக்கும்.<br><table><tr><td>1</td><td>திரு,பி,கோவிந்தன்,<br>ஒப்பந்ததாரா்</td><td>0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு. எம் சங்கா்,<br>ஒப்பந்ததாரா்</td><td>1.02% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr></table><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி,கோவிந்தன், ஒப்பந்ததாரா் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாா்டு எண்.1 முதல் 36 வாா்டுகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீா் விநியோக பகிா்மான குழய்கள் மற்றும் பிரதான குழய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் உடைப்பு மற்றும் அடைப்புகளை சீா் செய்ய நகராட்சியில் போதிய பொருட்கள் மற்றும் பணியாளா்கள் இல்லை. எனவே குடிநீா் விநியோக அத்தியாவசியம் கருதி மேற்படி குடிநீா் விநியோக பிரதான மற்றும் பகிா்மான குழய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் அடைப்புகளை மாா்ச் 2019 முடிய உள்ள காலத்திற்கு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு தயாாிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணியை குடிநீா்பிரிவு தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.16</td><td>பரமக்குடி நகராட்சி பராமாிப்பில் உள்ள கள்ளிக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தி வரும் 10 இன்ச் AC பிரதான குழாயில் இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டுவிட்டது. இதனால் நீரேற்றம் செய்ய இயலவில்லை. எனவே உடைந்த 10 இன்ச் AC பைப்புகளை மாற்றி 12 இன்ச் DI பைப்பு மற்றும் இதர காலா் பொருத்த உத்தேச செலவினம் ரூ.65000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் குடிநீா் அத்தியாவசிய பணியாக உள்ளதால் மேற்படி உடைப்புகளை சாிசெய்ய தேவையான பொருட்களை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் விதி எண்.15ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி உள்ளூா் நிறுவனத்தினாிடம் விலைப்புள்ளி பெற்று பணி செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. திரு.எஸ். சிவசுந்தரம் – ரூ.4056/–<br>2. திரு. எஸ். பாலசுப்பிரமணியன் – ரூ.3879.30<br>மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரேட் கொடுத்துள்ள திரு.எஸ். பாலசுப்பிரமணியன் என்பவா் மூலம் தளவாட பொருட்கள் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.68702/–யை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பாா்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |
| பொருள்.17 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை அகற்றுதல் மற்றும் கலவை உரக்கிடங்கில் குப்பைகளை சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இரண்டு டிப்பர் லாரிகள், இரண்டு காம்பாக்டர் லாரிகள், இரண்டு டம்பர் பிளேசர் லாரிகள், இரண்டு டிராக்டர் டிரைலர்கள், 4 டிப்பர் ஆட்டோக்கள், ஒரு Front End loader, ஒரு பொக்லைன் வாகனம், ஒரு பாப்காட் வாகனம் மற்றும் ஒரு கழிவு நீர் அகற்றும் வாகனம் போன்றவை பயன்பாட்டில் உள்ளது.<br><br>மேற்கண்ட வாகனங்களுக்கு வருடாந்திர தகுதிச்சான்று பெறுவதற்கான பழுதுப்பணிகளை தவிர அவ்வப்போது ஏற்படும் சிறு பழுதுப்பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1818, நாள்.12.08.2016ல் ரூ.5லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று வரை பழுதுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் தற்போது ரூ.55000/– மட்டுமே மீதம் உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் 01.01.2019 முதல் 31.03.2021 வரை 2 1/4 வருடங்களுக்கு மேற்கண்ட வாகனங்களுக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள ரூ.5 லட்சம் ஒதுக்கீடு செய்வதற்கும், பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும், 01.01.2019 முதல் 31.03.2021 வரை 2 1/4 வருடங்களுக்கு பொது சுகாதார வாகனங்களுக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள ரூ.5 லட்சம் ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.18 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் எண்.K.Dis No.18861/P3/2015, நாள்.2.07.2015ன்படியும், நகர்மன்றத் தீர்மான எண்.1563, நாள்.09.10.2015ன் படியும் இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் Excel Neat and Tidy Agency, Madurai என்ற நிறுவனம் மூலம் 01.1.2015 முதல் 31.10.2016 வரை ஒரு வருட காலத்திற்கு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவும், அதனைத் தொடர்ந்து பணி நீட்டிப்பு உத்தரவுகளும் வழங்கப்பட்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றது.<br><br>அதனைத் தொடர்ந்து, நகர்மன்றத் தீர்மான எண்.433, நாள்.07.02.2018ன்படி, Exsernet, Madurai என்ற நிறுவனம் மூலம் 01.03.2018 முதல் 31.08.2018 வரை 6 மாத காலத்திற்கு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவும், அதனைத் தொடர்ந்து பணி நீட்டிப்பு உத்தரவும் வழங்கப்பட்டு இன்று வரை துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டு 3 வருடங்கள் முடிவடைந்து விட்டபடியாலும், பரமக்குடி நகரின் தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள 373 பணியாளர்கள் தேவை என்றும், பற்றாக்குறையாக உள்ள பணியாளர்களை தனியார் மூலம் நியமித்துக் கொள்ள நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று பிரேரணை ஒன்று தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி அனுப்பப்பட்டது. |

அப்பிரேரணையை ஏற்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் K.Dis No.21685/P3/2018, நாள்.14.09.2018ல் 185 பணியாளர்களை அரசு வழிகாட்டுதலின்படி, ஒப்பந்த புள்ளி கோரி தனியார் நிறுவனம் (Out Sourcing) மூலம் பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் 2018–19ம் ஆண்டிற்கான ஊதிய விகிதத்தின்படி 185 பணியாளர்களை அரசு வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனம் (Out Sourcing) மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 185 பணியாளர்கள் x ரூ.406 x 365 நாட்கள் | = ரூ.27415150.00 |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF 13%) | = ரூ. 3563970.00 |
| தொழிலாளர் ஈட்டுறுதி தொகை (ESI –4.75%) | = ரூ. 1302220.00 |
| பாதுகாப்பு உபகரணங்கள், சீருடை சுகாதார பொருட்கள் (5 %) | = ரூ. 1370757.50 |
| தளசாடச் சாமான்கள், போனஸ் மற்றும் நிர்வாக செலவினங்கள் (5 %) | = ரூ. 1370757.50 |
| மொத்தம் | ரூ. 35022855.00 |

மேற்கண்டவாறு ரூ.351 லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முன் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி 25 வார்டு பகுதிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) ரூ.351 லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முன் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி 25 வார்டு பகுதிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) செலவினத்தை பொதுநிதி மற்றும் பயனாளர் கட்டணத் (SWM –SUC) திலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.454/2015/எச்2)

**பொருள்.19**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.2571/2017/J1, நாள்.28.11.2017ல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு டெங்கு மஸ்தூர் பணியாளர் வீதம் நியமித்து டெங்கு தடுப்பு பணிகளை வருடம் முழுவதும் மேற்கொள்ளுமாறும், மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விகிதத்துடன் EPF, ESI சேர்த்து தனியார் நிறுவனம் மூலம் அரசு வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி பரமக்குடி நகராட்சியில் தற்போதுள்ள சுமார் 30000 குடியிருப்புக்களில் 300 குடியிருப்புகளுக்கு ஒரு டெங்கு மஸ்தூர் பணியாளர் வீதம் 100 டெங்கு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் நகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தீர்மான எண்.435, நாள்.07.02.2018ன்படி 50 டெங்கு மஸ்தூர் பணியாளர்களை Exsernet, Madurai என்ற நிறுவனம் மூலம் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

| | |
|---|---|
| | அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் 12.10.2018ந் தேதிய டெங்கு ஆய்வுக் கூட்டம, 15.10.2018ந் தேதிய SBM ஆய்வுக் கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் நேரடி கள ஆய்வில் பரமக்குடி நகராட்சியில் தற்போதுள்ள 30143 குடியிருப்புகளில் 300 குடியிருப்புகளுக்கு ஒரு டெங்கு மஸ்தூர் பணியாளர் வீதம் மொத்தம் 100 DBC பணியாளர்ளை கண்டிப்பாக பணியில் அமர்த்தி டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தற்போது கூடுதலாக தேவைப்படும் 50 DBC பணியாளர்களை தற்போது DBC பணியாளர்களை வழங்கி வரும் Exsernet, Madurai என்ற நிறுவனம் மூலம் பெற்று டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.<br><br>அதன்படி இந்நகர்மன்றத் தீர்மான எண். நாள். .10.2018ன்படி, கூடுதலாக 50 டெங்கு மஸ்தூர் பணியாளர்களை Exsernet, Madurai என்ற நிறுவனம் மூலம பெற்று டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கொண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் வருகின்ற 28.02.2018ந் தேதியுடன் முடிவடைவதால் மாவட்ட ஆட்சியரின் 2018–18ந் தேதிய ஊதிய விகிதத்தில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>100 பணியாளர்கள் x ரூ.365 x 365 நாட்கள் = ரூ.13322500<br>தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF 13%) = ரூ. 1731925<br>தொழிலாளர் ஈட்டுறுதி தொகை (ESI –4.75%) = ரூ. 632819<br>பாதுகாப்பு உபகரணங்கள், சீருடை சுகாதார பொருட்கள் (5 %) = ரூ. 666125<br>தளசாடச் சாமான்கள், போனஸ் மற்றும் நிர்வாக செலவினங்கள் (5 %) = ரூ. 666125<br>மொத்தம் ரூ. 17019494<br><br>மேற்கண்டவாறு ரூ.171 லட்சம் உத்தேச செலவினத்தில் மேற்கண்ட பணிகளில் முன் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அனைத்து வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.171 லட்சம் உத்தேச செலவினத்தில் மேற்கண்ட பணிகளில் முன் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அனைத்து வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) செலவினத்தை பொதுநிதி மற்றும் பயனாளர் கட்டணத் (SWM –SUC) திலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1606/2012/எச்2) |
| பொருள்.20 | அரசாணை நிலை எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.23.11.2016ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும், பள்ளி வளாகத்தை சுத்தமாக பராமரிப்பதற்கும் தேவையான துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து தனியார் மூலம் பணியாளர்களைப் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத்தை பள்ளிகள் மூலம் நகராட்சிக்கு செலுத்தப்படும் கல்வி வரியிலிருநூது மேற்கொள்ளவும் உத்ததரவிடப்பட்டுள்ளது. |

அதன்படி நகர்மன்றத் தீர்மான எண்.429, நாள்.30.01.201ன்படி, பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள 7 நகராட்சி துவக்கப் பள்ளிகள், 2 நகராட்சி நடுநிலைப்பள்ளிகள், ஒரு அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளி, 3 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு கீழ்கண்டுள்ளவாறு

| வ.எண் | பள்ளிகளின் விபரம் | ஆண் பணி யாளர்கள் | பெண் பணி யாளர்கள் | மொத்த பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 7 நகராட்சி துவக்கப்பள்ளிகள் (7x1 = 7) | 0 | 7 | 7 |
| 2. | 2 நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் (2 x 1 = 2) | 0 | 2 | 2 |
| 3. | 1 அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளி (1 x 1 = 1) | 0 | 1 | 1 |
| 4. | 3 அரசு மேல்நிலைப்பள்ளிகள் (3 x 2=6) | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 3 | 13 | 16 |

16 பணியாளர்களை M.S.Man Power Agency, Paramakudi என்ற நிறுவனம் மூலம் பெற்று 01.03.2018 முதல் இன்று வரை துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் வருகின்ற 28.02.2019ம் தேதியுடன் முடிவடைகின்றது.

அதனால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் 2018–19ம் ஆண்டிற்கான ஊதிய விகிதத்தின்படி கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 16 பணியாளர்கள் x ரூ.406 x 250 நாட்கள் | = ரூ.1624000 |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF 13%) | = ரூ. 211120 |
| தொழிலாளர் ஈட்டுறுதி தொகை (ESI –4.75%) | = ரூ. 77140 |
| பாதுகாப்பு உபகரணங்கள், சீருடை சுகாதார பொருட்கள் (5 %) | = ரூ. 81200 |
| தளசாடச் சாமான்கள், போனஸ் மற்றும் நிர்வாக செலவினங்கள் (5 %) | = ரூ. 81200 |
| மொத்தம் | ரூ. 2074660 |

மேற்கண்டவாறு ரூ.21 லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முன் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பள்ளிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) ரூ.21 லட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முன் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பள்ளிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) செலவினத்தை கல்வி வரி மற்றும் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4445/2016/எச்2)

| | |
|---|---|
| பொருள்.21 | திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் தினசரி 100 கிலோவிற்கு மேல் அல்லது 5000ச.மீட்டர் பரப்பளவுள்ள இடங்களில் குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்கள் பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள்ஆவர் (Bulk waste generator) இவர்கள் உருவாக்கும் மக்கும் குப்பைகளை தங்களது சொந்த பொறுப்பிலேயே இறுதியாக்கம் செய்திடவும் மக்காத உலர் கழிவுகளை மட்டுமே உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சேகரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>பரமக்குடி நகராட்சி துணை விதிகளில் பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள் மக்கும் குப்பைகளை தங்களது சொந்த பொறுப்பிலே இறுதியாக்கம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இவ்வலுவலக அறிவிப்பில் பெருமளவு குப்பைகள் உருவாக்கும் நிறுவனங்களுக்கு தங்களது சொந்த பொறுப்பில் இறுதியாக்கம் செய்து கொள்வது சம்மந்தமாக இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் பெருமளவு குப்பைகள் உருவாக்கும் நிறுவனங்களை தங்களது மக்கும் குப்பைகளை இறுதியாக்கம் செய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>பெருமளவு குப்பைகள் உருவாக்கும் நிறுவனங்கள் தங்கள் வளாகப் பகுதியிலேயே குப்பைகளை இறுதியாக்கம் செய்திட போதுமான இடவசதியும் பொருளாதார வசதியும் இல்லாத காரணங்களால் அனைவரும் பொதுவான இடத்தில் தனியார் மூலம் குப்பைகளை இறுதியாக்கம் செய்து கொள்வதாக தெரிவித்துள்ளனர்.<br><br>Evergeen Environment Services, Ramanathapuram என்ற நிறுவனம் பெருமளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களின் மக்கும் குப்பைகளை தங்களது நிறுவனத்தின் சொந்த பொறுப்பிலே சேகரித்து உரம் தயாரித்து இறுதியாக்கம் செய்ய விருப்பம் தெரிவித்தும் அதற்கான இடத்தினை ஒதுக்கீடு செய்து வழங்க கேட்டுக் கொண்டுள்ளது.<br><br>மத்திய அரசின் பெருமளவு குப்பைகளை உருவாக்குபவர்களுக்கான வழிகாட்டுதல்களில் உள்ளாட்சி அமைப்புகள் பெருமளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கு பொதுவான இடத்தில் இறுதியாக்கம் செய்ய தேவையான நிதி உதவி அல்லாத ஏனைய உதவிகளை செய்து கொடுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரையில் பெருமளவு குப்பைகளை உருவாக்கும் நிறுவனங்களின் குப்பைகளை தனியார் மூலம் இறுதியாக்கம் செய்திட மேற்படி தனியார் நிறுவனத்திற்கு நகராட்சி உரக்கிடங்கில் தேவையான இடத்திற்கு தரை வாடகை நிர்ணயம் செய்து கொடுத்து இட வசதி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் அடிப்படையில் பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ), சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆய்வு செய்து நகராட்சி கலவை உரக்கிடங்கில் 98’’ x 54’’ = 5292 சதுர அடி உள்ள சிமெண்ட் கான்கிரிட் தரைதளத்துடன் கூடிய பழைய விண்ட்ரோஸ் செட்டில் Evergreen Envoirnment Services, Ramanathapuram என்ற நிறுவனம் நுண்ம உரக்கூடம் அமைத்துகொள்தவற்கும், அதற்கான தரை வாடகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.5000/– நகராட்சிக்கு செலுத்துவதற்கும், மேற்கண்ட தரைவாடகையினை 3 வருடங்களுக்கு ஒரு முறை 5 சதவீதம் உயர்த்தி வசூல் செய்வதற்கும், நகராட்சி நிர்வாக காரணங்களுக்குட்பட்டும், வெளிசந்தை மதிப்பீட்டின்படி தேவைப்படின் மாற்றியமைக்கப்படும் என்ற நிபந்தனையுடன் மேற்கண்ட இடத்தினை 10 வருடங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு–**<br>1. தரை வாடகை ரூ.5000/– நிர்யணம் செய்து கலவை உரக்கிடங்கில் உள்ள பழைய விண்ட்ரோஸ் செட்டினை வாடகைக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தரை வாடகையினை 3 வருடங்களுக்கு ஒரு முறை 5 சதவீதம் உயர்த்தி வசூல் செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட இடத்தினை 10 வருடங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.22 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 15.10.18ந் தேதிய SWM சம்மந்தமான ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவு மற்றும் வழிகாட்டுதலில் அந்தந்த நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை 100 % சிறப்பான முறையில் செயல்படுத்திட தற்போதுள்ள மக்கள் தொகை மற்றும் வரிவிதிப்புகளுக்கு ஏற்ப துப்புரவு பணியாளர்களை நியமித்து துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நிரந்தர துப்புரவு பணியாளர்கள் காலியிடங்கள் மற்றும் தற்போது தனியார் மூலம் (Out Sourcing) பணிபுரியும் பணியாளர்களுடன் அரசாணை நிலை எண்.101, நாள்.30.04.1997ன்படி, தேவைப்படும் பணியாளர்கள் குறித்து பிரேரணை தயார் செய்து வழங்கும்படி அறிவுத்தப்பட்டது.<br><br>அதன்படி பரமக்குடி நகராட்சி இராமநாதபுரம் மாவட்டத்திலேயே பெரிய நகராட்சியாகும். 2018ம் ஆண்டு மைய மக்கள் தொகை 105000 ஆகும். மாவட்டத்திற்குள் உள்ள அனைத்து புன்னிய தலங்களுக்கு வந்து செல்வோர் பரமக்குடி நகர் வந்து தான்செல்கின்றனர். நகரின் தற்போதைய மக்கள் தொகை மற்றும் வரிவிதிப்புகளுக்கு ஏற்ப அரசாணை நிலை எண்.101ன் படி<br><br>தேவைப்படும் துப்புரவுப் பணியாளர்கள் – 423 நபர்கள்.<br>தற்போது பணியில் உள்ள பணியாளர்கள் – 259 நபர்கள்.<br>(நிரந்தர பணியாளர்கள் – 74<br>தனியார் பணியாளர்கள் –185<br>––––<br>259<br>––––<br>தற்போது கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் ––––––––<br>164 நபர்கள்<br>––––––––<br><br>கூடுதலாக 164 துப்புரவுப் பணியாளர்கள் தேவை என்று பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவாகளின் மூலம நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 15.10.18 அன்று அனுப்பப்பட்டது.<br><br>அப்பிரேரணையை ஏற்று நகராடசி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.K.Dis No.28369/J3/2018, நாள் 22.11.2018ல் பரமக்குடி நகராட்சியில் தற்போது பணிபுரியும் 259 பணியாளர்களுடன் கூடுதலாக 158 பணியாளர்களை தனியார் மூலம் (Out Sourcing) பணியில் அமர்த்தி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள உத்தரவு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட உத்தரவு நகர்மன்றத்தின் பார்வைக்கும், பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கும். |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு– <br> 1) மன்றம் அனுமதிக்கலாம். <br> 2) அரசு வழிகாட்டுதலின்படி உதேச செலவினம் கணக்கீடு செய்து 158 பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். <br> (ந.க.எண்.454/2015/எச்2) |
| பொருள்.23 | பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2018–19ம் ஆண்டில் வெளியூர் பயணம் செய்தவர்களுக்கு பயணப்படி பட்டியல்படி உத்தேச செலவினம் ரூ.200000/– வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக்குறிப்பு– <br> மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி